1972 மார்ச் 28]

இடதுபுறமுள்ள, அதாவது வைகையாற்றிலிருந்து பேரணை மதகு பாலம் வரை உள்ள புதிய வரிசைக் கிராமத்தில் ஒன்று சேர்க்கப் பட்ட வாய்க்கால்கள் திட்டமாகும். மத்திய அரசுக்கு அனுப்பி ஒரு ஆண்டுக்காலம் ஆகிறது என்று நினைக்கிறேன். மத்திய அரசின் அனுமதியை எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. க. நாகராஜன் : தலைவரவர்களே, திண்டுக்கல் வட்டத்தில் கோணப்பட்டி, களங்கையாறு, அஞ்சுகுளிப்பட்டி ஆகிய இடங் களில் சிறிய நீர்த் தேக்கங்கள் தேவை. அமைச்சரவர்கள் அதிலே 1-2 இடங்களைப் பார்வையிட்டு இருக்கிறார்கள். அவற்றை விரைந்து நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ? வறட்சி மிகுந்த அந்தப் பகுதியில் இவைகள் மிகப் பயனுள்ளதாக இருக்கும் என்ற காரணத்தால் அரசு விரைந்து நடவடிக்கைகள் எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சிறிய நீர்த் தேக் கங்களைப்பற்றிய குறிப்பு தற்போது இல்லை, என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற அந்தத் திட்டங்களை அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

திரு. ஆ. முனியாண்டி : தலைவரவர்களே, அந்த வைகை மேம் பாட்டுத் திட்டம், வைகை அணைக் கால்வாய் சிமெண்ட் கான்கிரீட் மூலம் வருகிறது என்று சொல்லப்படுகிறது. அதில் மதகுப் பாசனம் செய்ய உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, அது பற்றிய விவரம் இல்லை. பெரியார் முன்னேற்றத் திட்டம் என்ற அடிப்படையில்தான் அந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. ப. முத்துசாமி : தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் வேதசாத்தூர் தாலுக்காவில் கோடகனூர் திட்டம் போடப் பட்டதே, அது எந்த நிலைமையில் இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கோடகனூர் திட்டம்பற்றி விரிவான புலனாய்வு (டிடெயில்ட் இன்வெஸ்டி கேஷன்) நடைபெற்று வருகிறது.